செய்தி வெளியீடு எண். 220 நாள்: 26.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் ஆசிரியர் தகுதித் தேர்வு 29.04.2017 மற்றும் 30.04.2017 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்டம் ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-1 29.04.2017 அன்று 28 தேர்வு மையங்களில் 11407 தேர்வர்களும் மற்றும் தாள்-2 30.04.2017 அன்று 37 தேர்வு மையங்களில் 15059 தேர்வர்களும் எழுதவுள்ளனர். இத்தேர்வு மையங்களுக்கு தேர்வர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தாள் 1 க்கு 28 முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 28 கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 28 துறை அலுவலர்கள், 35 கூடுதல் துறை அலுவலர்களும் 575 அறை கண்காணிப்பாளர்களும் தாள் 2 க்கு 37 முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 37 கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 37 துறை அலுவலர்கள், 50 கூடுதல் துறை அலுவலர்கள் அறை கண்காணிப்பாளர்களும் 755 நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்களை முழு பரிசோதனை செய்ய உடற்கல்வி இயக்குநர், உடற்கல்வி ஆசிரியர்கள், தேசிய மாணவர் படை ஆசிரியர்கள் 245 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாற்றுத்திறனாளி தேர்வர்கள் 81 பேருக்கு சொல்வதை எழுதும் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. மந்தன கட்டுக்களை வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்திலிருந்து தேர்வுமையத்திற்கு வினாத்தாட்களை வழித்தட அலுவலர்களுடன் பாதுகாப்பாக எடுத்து செல்ல ஆயுதம் ஏந்திய காவலர்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் தகுதித் தேர்வு எழுதவரும் தேர்வர்கள் கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றவேண்டும்

தேர்வர்கள் தேர்வுக்கு முந்தைய நாட்களில் தேர்வுமையத்திற்கு சென்று அதன் அமைவிடத்தை உறுதிபடுத்திக்கொள்ளுமாறு தேர்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வர்கள் மையத்திற்கு வரவேண்டிய நேரம் - காலை 08.30 மணி

தேர்வு மைய நுழைவுவாயிலில் காவலர் சோதனை நடைபெறும் நேரம்- காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.

காலை 10.00 மணிக்கு மேல் வரக்கூடிய தேர்வர்கள் கண்டிப்பாக தேர்வுமையத்திலுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தேர்வர்கள் தேர்வறைக்குள் நுழைவுச்சீட்டு (Hall Ticket) மற்றும் நீலம் அல்லது கருப்பு பந்துமுனைப் பேனா (Blue or Black Ball Pen) மட்டுமே எடுத்துச்செல்ல வேண்டும்.

தேர்வு நடைபெறும் வேளையில், தேர்வர்கள் வெளியில் செல்ல அனுமதி இல்லை. தேர்வு முடிந்ததும் OMR விடைத்தாளின் பிரதியை(Carbon copy) தேர்வர் பெற்றுச்செல்ல வேண்டும்.

அச்சிடப்பட்ட அல்லது கையால் எழுதப்பட்ட தாள்கள் எவற்றையும் தேர்வு அறைக்குள் வைத்திருக்க அனுமதியில்லை.

கைபேசி, கைக்கணினி, மடிக்கணினி, தரவி அல்லது கணக்கிடும் கருவிகள் போன்றவற்றை இத்தேர்வறைக்குள் வைத்திருக்க அனுமதியில்லை.

தேர்வறைக்குள் அறைக்கண்காணிப்பாளர் அல்லது சக தேர்வர் ஆகியோருடன் முறைதவறி நடப்பவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றாத தேர்வர்கள் அன்றையத் தேர்வினைத் தொடர்ந்து எழுத அனுமதிக்கப்படாததோடு. ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் தேர்வுகளைத் தொடர்ந்து எழுத நிரந்தர தடை விதிக்கப்படுவதுடன் காவல்துறை மூலம் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~